**பனை அபிவிருத்தி சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

பனை அபிவிருத்தி சபையின் (“சபை” ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

### 1.2 கருத்து மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் கருத்து மறுப்பு அபிப்பிராயமாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கருத்து மறுப்பு கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்துடன் இணங்காமை

| | குறிப்பிட்ட நியமத்துடன் தொடர்பான இணங்காமை | முகாமை கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் கைப்பணி ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் விதை | இவ்விடயத்தை சீர்செய்வதற்காக ஆளுகைச்சபையின் | நியமத்தில் உள்ள வழிகாட்டலுக்கமைய |

| | | | |
|---|---|---|---|
| | நடுகைக்கு என ஏற்பட்டிருந்த ரூபா. 49,906,685 ஆன அபிவிருத்தி செலவினங்கள் சாத்தியமான பொருளாதார நன்மைகள் அல்லது சேவைச் சாத்தியங்கள் இனங்காணப்படாது எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்-20 ற்கு முரணான வகையில் சொத்தாக இனங்காணப்பட்டிருந்தது. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களின் நடைமுறையல்லா சொத்தின் பெறுமதி அத்தொகையால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | அனுமதியுடன் சபை முகாமைத்துவத்தால் அவசியமான நடவடிக்கை எடுக்கப்படும். | அபிவிருத்தி செலவினங்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 3 இன் படி நிதிக்கூற்றுக்களில் பின்னோக்கிய சீராக்கம் மேற்கொள்ளப்படாமலும் நிதிக்கூற்றுக்களில் அவசியமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படாமலும் ரூபா. 119,151,120 கூட்டுமொத்தமாக 03 உருப்படிகளுக்கான முன்னைய ஆண்டு சீராக்கம் நிகழாண்டின் உரிமை மாற்றக்கூற்றில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தழுவு அனுமதியுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டு சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் பின்னோக்கி சீராக்கப்படல் வேண்டும். |
| (இ) | நிகழாண்டிற்கான கூட்டுமொத்தமான ரூபா. 13,867,838 செலவினம் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 01 ற்கு முரணாக கொடுக்க வேண்டியவைகளுக்கு எதிராக நிதிக்கூற்றுக்களில் ஈடுசெய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் ஆண்டிற்கான தேறிய பற்றாக்குறை அதே தொகையால் கூட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் செலுத்த வேண்டியவைகள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சீராக்கப்பட்டு 2022 கணக்கில் உள்ளடக்கப்படும். | பொறுப்புக்களும் செலவினங்களும் நிதிக்கூற்றுக்களில் அவை எதிரிடை செய்யப்படாது வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 2 ற்கு அமைவாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சலை கணிப்பதற்கு ரூபா. 27,728,636 மொத்தமான நடைமுறை பொறுப்புக்கள், சில்லறை வருமதியாளர், அலுவலர் முற்பணங்கள், மீட்கத்தக்க வைப்புக்கள் மற்றும் வாடகை முற்பணங்கள் சரியாக சீராக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக காசுப்பாய்ச்சல் கூற்றின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | திருத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் இத்துடன் இணைக்கப்படுகிறது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 2 ற்கமைய காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமை கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கல்பிட்டி உற்பத்தி நிலைய கட்டட புனரமைப்பு வேலைக்கான ரூபா. 3,000,000 பெறுமதியான முற்பண கொடுப்பனவு முற்பணமாக கணக்கிடப்படாது நிகழாண்டிற்கான செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக அதேயளவு தொகையால் முறையே நடைமுறைச்சொத்து குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் பற்றாக்குறை கூட்டிக்காட்டப்பட்டிருந்தது. | குறித்துக் கொள்ளப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டுக் கணக்கில் சீராக்கப்படும். | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படல் வேண்டும். |
| (ஆ) | வெள்ளவத்தையில் வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டட குத்தகை உடன்படிக்கையின் படி வருடாந்த வாடகை செலவினமாக ரூபா. 6,000,000 அமைந்திருந்தது. எவ்வாறெனினும், வாடகை முற்பண கொடுப்பனவின் விகிதாசாரத்தை வாடகை கொடுப்பனவின் பகுதியாக இனங்காண முடியாமையால் காசாக செலுத்தப்பட்ட ரூபா. 4,500,000 மட்டும் நிகழாண்டுக்கான வாடகை செலவினமாக இனங்காணப்பட்டிருந்தது. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் வாடகை முற்பணம் ரூபா. 1,500,000 ஆல் கூட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் அதே அளவால் தேறிய பற்றாக்குறை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ரூபா. 1,500,000 ஆல் கூட்டிக்காட்டப்பட்ட வெள்ளவத்தையில் அமைந்துள்ள சொத்தின் குத்தகை உடன்படிக்கை படியாக வாடகை முற்பணம் பொருத்தமான முறையில் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படும். | கணக்கீட்டு காலத்திற்கான செலவினம் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (இ) | ஓய்வுகால நன்மை கடப்பாட்டின் உண்மை பொறுப்பை கருத்திலெடுக்காமல் ஓய்வுகால நன்மைக்கான ஏற்பாடு ரூபா. 19,642,888 ஆல் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. இதன்விளைவாக ஓய்வு நன்மை கடப்பாடு நிதிக்கூற்றுக்களில் அத்தொகையால் கூட்டிக்காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் சீராக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் மிகைப்படுத்தப்படாது வெளிக்காட்டப்படல் வேண்டும். |
| (ஈ) | பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் 24 நவம்பர் 2017 இல் பதிவு செய்யப்பட்டு சபைக்கு உடமையாக காணப்பட்ட கரைநகர் காணி பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்படவில்லை. இதன் விளைவாக நடைமுறையல்லா சொத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்பட்டு 2022 நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்படும். | சபைக்குடையதான சகல சொத்துக்களும் கட்டாயம் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |
| (உ) | நிதிக்கூற்றுக்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் இணைப்புக்களை பரீட்சிக்கும் போது நான்கு | 2022 ஆம் ஆண்டு இறுதிக் கணக்கில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகள் இணக்கப்பட்டு கணக்குகளில் சீராக்கப்படல் |

| | | |
|---|---|---|
| உருப்படிகளில் ரூபா. 5,114,866 மொத்த வேறுபாடு அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும், வேறுபாட்டிற்கான காரணம் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |

**1.5.3 கணக்காய்விற்கு கிடைக்கத்தக்கதாய் இல்லாதிருந்த ஆவண சான்றுகள்**

| குறிப்பிட்ட நியமத்துடன் தொடர்பான இணங்காமை | முகாமை கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா. 28,007,606 பெறுமதியான 04 காணிகளின் உறுதிகள், ரூபா. 1,082,328 பெறுமதியான காசுப்பாய்ச்சல் கூற்று சீராக்க விபரங்கள், ரூபா.17,898,636 பெறுமதியான வாடகை முற்பணம், வாடகைக் கொடுப்பனவுகளுக்கான வாடகை ஒப்பந்தங்கள் மற்றும் வாடகை உடன்படிக்கைகள் ரூபா.119,151,120 பெறுமதியான முன்னைய ஆண்டு சீராக்கத்திற்கான நாட்குறிப்பு பதிவுகள் என்பன கணக்காய்விற்கு கிடைக்கத்தக்கதாயில்லாதிருந்தது. இதன் விளைவாக மேற்கண்ட உருப்படிகளை கணக்காய்வில் ஏற்றுக்கொள்ளவோ திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ முடியாதிருந்தது. | உங்களின் பார்வைக்காக கிடைக்கத்தக்கதாயிருந்த உறுதிகள் இத்துடன் இணைக்கப்படுகிறது. | கணக்காய்விற்குத் தேவையான சகல சான்றுகளும் அவர்கள் கோரியதற்கமைய கட்டாயம் கணக்காய்வு செய்ய சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய செலுத்தவேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமை கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 06 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்படாதிருந்த சில்லறை கடனாளிகள் ரூபா. 9,857,265 ஆன பெற்றுக்கொள்ளக்கூடிய மீதி தொடர்பில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முகாமைத்துவ கருத்துரை கிடைக்கவில்லை. | பெறப்பட வேண்டியவைகளை அறவிட கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 செலுத்தவேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமை கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 01 தொடக்கம் 06 ஆண்டுகளாக தீர்ப்பனவு செய்யப்படாதிருந்த கூட்டுமொத்தம் ரூபா. 3,816,392 ஆன செலுத்தவேண்டிய மீதிகள் தொடர்பில் | முகாமைத்துவ கருத்துரை கிடைத்திருக்கவில்லை. | உண்மையான பொறுப்புக்கள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் கட்டாயம் |

| | | | |
|---|---|---|---|
| | தீர்ப்பனவு செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | தீர்க்கப்பட வேண்டும். |

## 1.7. சட்டங்கள், விதிகள், ஒழுங்குகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானத்துடன் இணங்காமை

| தொடர்புடைய சட்டம், விதி, ஒழுங்குகள் | இணங்காமை | முகாமை கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) ஊழியர் சேமலாப நிதிய சட்டம் 16 ஆம் பிரிவு | ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புக்களை உரிய காலத்தில் சபை செலுத்த தவறியதால் 2001 இலிருந்து 2021 வரையான காலப்பகுதிகளுக்கான மிகை அறவீட்டு கூட்டுத்தொகை ரூபா. 41,966,393 நிலுவையாக இருந்திருந்தது. | ரூபா. 41,366,393 மிகை அறவீடுகள் தொடர்புடைய ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. | சட்டத்திலுள்ள ஏற்பாட்டுடன் கட்டாயம் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய சட்டம் 46 ஆம் பிரிவின் 16 ஆம் உபபிரிவு | ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புக்களை சபை உரிய காலங்களில் செலுத்தாமையால் 29 ஐப்பசி 2021 நிலுவையாக காணப்பட்ட ரூபா. 389,069 கூட்டுமொத்தமான மிகை அறவீடு மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எவ்வாறெனினும், கொவிட் தொற்று காலம் காரணமாக 29 ஐப்பசி 2021 இல் உள்ளபடியான நிலுவை மிகை அறவீடு ரூபா. 389,069 தொடர்பான நியாயப்படுத்தல் அறிக்கை இணைக்கப்படுகிறது. ஈரீஎவ் மிகை அறவீடு உரிய காலத்தில் செலுத்தப்பட முடியும். | சட்டத்திலுள்ள ஏற்பாட்டுடன் கட்டாயம் இணங்குதல் வேண்டும். |
| (இ) இலங்கை ஜனநாயக குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள்<br>(i) நிதி ஒழுங்கு 371 (2) | உபகட்டுநிதியின் மீதிகள் நோக்கம் நிறைவு செய்யப்பட்டவுடன் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்படவேண்டும். எப்படியாயினும், 05 தடவைகளில் கூட்டுமொத்தம் ரூபா. 93,600 வருட இறுதிவரை தீர்ப்பனவு செய்யப்படவில்லை. மேலும் 72 சந்தர்ப்பங்களில் ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா. 1,541,400 முற்பணங்கள் உரிய காலத்தில் தீர்ப்பனவு செய்யப்படாது 21 நாட்களில் இருந்து | எதிர்காலத்தில் இறுக்கமான நடைமுறை அமுல்படுத்தப்படுவதுடன் தொடர் செயற்பாட்டிற்கான கோரிக்கை கருத்தில் எடுக்கப்படும். மேலும் 2022 கணக்கில் திருத்தப்பட்டு சீர்செய்யப்படும். | நிதி ஒழுங்கு விதியுடன் கட்டாயம் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 331 நாட்கள் தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது. | | |
| (ii) நிதி ஒழுங்கு 755(2) | இருப்பு பதிவேட்டு மீதிக்கும் உண்மை மீதிக்கும் இடையிலான வேறுபாட்டை இணக்கம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ் விடயத்தை சீர்செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதி ஒழுங்கு விதியுடன் கட்டாயம் இணங்குதல் வேண்டும். |
| (iii) நிதி ஒழுங்கு 880(i) | 22 அலுவலர்கள் தமது கடமைகளை உண்மையாக புரிவதற்கு அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை வைப்புக்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | இவ் விடயத்தை சீர்செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதி ஒழுங்கு விதியுடன் கட்டாயம் இணங்குதல் வேண்டும். |
| (ஈ) 2003 யூன் 2 ஆம் திகதிய பிஇடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | சபையின் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 165 நாள் தாமதத்துடன் 2022 ஆகஸ்ட் 12 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஆளுகைச்சபையின் அனுமதி 2022 செப்ரெம்பர் 23 ஆம் திகதி அதாவது 10 வது கூட்டத்தில் பெறப்பட்டது. எதிர்காலத்தில் உரிய நேரத்தில் அவர்கள் சமர்ப்பிப்பார்கள். | சுற்றுநிருப வழிகாட்டல்களுக்கு கட்டாயம் இணங்குதல் வேண்டும். |

## 2. நிதிமீளாய்வு

### 2.1 நிதி விளைவு

நிகழாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா. 33,538,883 ஆன பற்றாக்குறையை கூட்டியிருந்ததுடன் அதற்கெதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 67,787,399 ஆக காணப்பட்டிருந்தது. இது நிதி விளைவுகளில் ரூபா. 34,248,516 ஆன முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. இதற்கான காரணமாக ஏனைய வருமானத்தில் ஏற்பட்ட ரூபா. 93,379,664 அதிகரிப்பு அமைந்திருந்தது.